## தமிழ் - பிழைகளும் திருத்தங்களும்

1. படிவ வினாவிற்கு வினா எண் போடாமலும், ஆங்கிலத்தில் நிரப்பியும், பிணைப்பாளர் கையொப்பம் போட்டும் எழுதுவதைத் தவிரக்கவும். "அலுவலக பயன்பாடு பகுதிகளில் For Office Use" என்ற பகுதியில் மாணவர்கள் எதுவும் எழுதக்கூடாது.
2. நெடுவினாவிற்கான விடை தெரியவில்லை எனில், அந்த வினாவிற்குத் தொடர்புடைய பதிலை எழுத வேண்டுமே தவிர, அதே பாடத்தில் தாங்கள் படித்த வேறு நெடுவினாவின் விடை எழுதுவதைத் தவிர்க்க வேண்டும். உதாரணமாக, "ஜெயகாந்தன் தன்படைப்புகளைத் தனித்தன்மையில் தருபவர்" என்ற கூற்றினை ஆய்வு செய்க என்ற வினாவிற்கு ஜெயகாந்தனின் "தர்க்கத்திற்கு அப்பால்" என்ற சிறுகதையையும், புத்தக நெடுவினாவான சுவரொட்டியையும் எழுதியுள்ளனர். இது போன்ற புதிய வினாக்களை மாணவர்கள் சற்று கவனமாக கையாள வேண்டும்.
3. பகுபத உறுப்பிலக்கணம் பகுதியில் உறுப்புகள் பிரித்துக் காட்டப்படாமல் நேரடியாக விடை எழுதக் கூடாது.
4. விடைக்கேற்ற வினா, பகுபத உறுப்பிலக்கணம் போன்ற பகுதிகளுக்கு நன்கு விடைத் தெரிந்தால் மட்டும் எழுதவும் அல்லது மற்ற வினாக்களுக்கு விடை தெரியாதபோது இதற்கு விடை எழுதலாம்.
5. அலகிட்டு வாய்பாட்டில் கடைசியாக எடுத்து எழுதும்போது இந்த குறட்பா "நாள் / மலர் / காசு / பிறப்பு" என்னும் வாய்ப்பாட்டோடு முடிந்துள்ளது என எடுத்து எழுதுதல் நல்லது.
6. கடிதம் பகுதியில் வினாவிலேயே பெயரும் முகவரியும் கொடுக்கப்பட்டால் அதைத்தான் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு கொடுக்காத பட்சத்தில் பெயருக்கு பதிலாக 'அஅஅ' என போட வேண்டும். கடிதத்திற்கு முன்னுரை, முடிவுரை எழுதக்கூடாது.
7. மொழிபெயர்ப்பு பகுதியில் (Translation) வினா பத்தி வடிவில் இருந்தால் விடையை பத்தியாக எழுத வேண்டும். இதற்கான மாற்றுவினாவிற்கு (செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா) மற்றவர்கள் கட்டாயமாக விடையளிக்க கூடாது.
8. காட்சிக்குக் கவிதை எழுதுக / தொடர் எழுதுக பகுதியில் மனப்பாடம் செய்து எழுதாமல் சொந்த நடையில் எழுதலாம். வினாவை நன்கு வாசித்து, கவிதையா? தொடரா? என கவனித்து பதிலளிக்கவும்.
9. கட்டுரை வினா எழுதும்போது கண்டிப்பாக குறிப்புச்சட்டகம் எழுத வேண்டும்.
10. நயம்பாராட்டுக வினாவிற்கு எதுகை, மோனை ஆகியவற்றை அடிக்கோடிட்டு காட்ட வேண்டும். பொதுவாக மையக்கருத்து, திரண்ட கருத்து, முன்னுரை, முடிவுரை, தலைப்பு ஆகியவற்றுடன் ஏதேனும் நான்கு நயங்கள் எழுதியிருந்தாலே முழு மதிப்பெண் வழங்கப்படும். சில வினாக்களில், கவிதை நயம் என குறிப்பிட்டு வினாவில் கேட்கப்பட்டிருந்தால் அதை சார்ந்த விடையை எழுதினால்தான் முழு மதிப்பெண்களைப் பெற வழிவகுக்கும்.
11. மனப்பாடப் பகுதியை மிகச்சரியாக குறியீடுகளுடன் எழுத வேண்டும். ஒரு வரியை மடித்து அடுத்த வரியில் எழுதும் நிலை வந்தால் அதை Margin-ஐ ஒட்டி எழுதாது சற்று தள்ளி வலது பக்கம் எழுத வேண்டும்.

## தமிழ் - மெல்ல கற்கும் மாணவர்களுக்கான ஆலோசனைகள்

| | | |
|---|---|---|
| **செய்யுள்** | : | முதல் 4 அல்லது 5 செய்யுள் பகுதி புத்தக குறு, சிறு மற்றும் நெடுவினாக்களை நன்கு படித்தால், மூன்று வினாக்களுக்கு (2, 3 & 5 Marks) விடையளிக்க இயலும். |
| **உரைநடை** | : | முதல் 4 அல்லது 5 உரைநடை பகுதி புத்தக குறு, சிறு மற்றும் நெடுவினாக்களை நன்கு படித்தால், மூன்று வினாக்களுக்கு (2, 3 & 8 Marks) விடையளிக்க இயலும். |
| **துணைப்பாடம்** | : | முதல் 4 அல்லது 5 துணைப்பாட பகுதி புத்தக நெடுவினாக்களை நன்கு படித்தால், ஒரு நெடு வினாவிற்கு (8 Mark) விடையளிக்க இயலும். |

### பகுதி – I (1 மதிப்பெண் வினா)

1. Book back One Mark Question மொத்தம் 46 உள்ளது. இவற்றை நன்கு படித்தாலே தேர்வில் கேட்கப்படும் 15 ஒரு மதிப்பெண் வினாக்களில், 8 வினாக்களுக்கு விடையளிக்கலாம்.

### பகுதி – II (2 மதிப்பெண் வினா)

#### பிரிவு - 1

2. விடைக்கேற்ற வினாவிற்கு வினாவில் உள்ள ஒரு பகுதியை எடுத்துவிட்டு எதை, எவ்வாறு, எங்கு, எப்படி, யார்? என்ற வார்த்தைகளை சேர்த்து எழுதி விடை எழுதலாம்.
3. 21ஆவது கட்டாய வினாவில் அதிகம் மனப்பாட திருக்குறளே கேட்கப்படும். பாடபுத்தகத்தில் மொத்தம் 10 மனப்பாட திருக்குறள்களே உள்ளன. இவற்றை நன்கு பயிற்சி செய்தால் முழு மதிப்பெண் பெறலாம். குறளின் கருத்தை கொடுத்து பாடலை எழுதுமாறும் கேட்கலாம். இல்லையெனில், திருக்குறள் சார்ந்த வினா 2 மதிப்பெண் வினா கேட்கப்படலாம்.

**பிரிவு - 2**

4. பகுபத உறுப்பிலக்கணம் வினாவில் பகுதி, சந்தி, விகாரம், இடைநிலை, சாரியை, விகுதி என்ற வரிசையில் விடை எழுதவும்.

**எ.கா: பொறித்த = பொறி + த் + த் + அ**
பொறி - பகுதி ; த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை; அ - பெயரெச்ச விகுதி

5. கலைச்சொற்கள் (புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள 9 இயல்களின் கலைச்சொற்கள்), இரு சொற்களை தொடரில் அமைத்தல், தொகைகளை அடையாளம் காணுதல், கூட்டப்பெயர்கள் மற்றும் இலக்கண பகுதி புத்தக குறுவினாக்களை நன்கு படித்தால் இப்பகுதி வினாக்களுக்கு எளிதாக விடையளிக்கலாம்.

**பகுதி – III (3 மதிப்பெண் வினா)**

**பிரிவு - 1**

6. இப்பகுதியில் உரைப்பத்தி ஒன்று கொடுத்து அதிலிருந்து மூன்று வினாக்கள் கேட்கப்பட்டிருக்கும். பத்தியிலிருந்து விடையை கண்டறிந்து, பத்தியில் அதிகம் இடம்பெற்ற வார்த்தையை தலைப்பாக எழுதவும்.

**பிரிவு - 2**

7. 34ஆவது மனப்பாடப் பகுதி கட்டாய வினாவிற்கு முதல் 5 அல்லது கடைசி 4 இயல்களின் மனப்பாட பாடல்களை நன்கு பயிற்சி செய்தால் ஒரு மனப்பாட பாடலை கண்டிப்பாக எழுத இயலும்.

**பிரிவு - 3**

8. அணியை சான்றுடன் விளக்குக அல்லது பாடலில் இடம்பெற்றுள்ள அணியை விளக்குக என்ற ஒரு வினா இப்பகுதியில் கேட்கப்படும். இவ்வினாவிற்கு அணியின் பெயர், அணி இலக்கணம், சான்று, பாடலின் பொருள் மற்றும் அணிப்பொருத்தம் ஆகிய தலைப்புகளில் தீவக அணி, தன்மை அணி, நிரல்நிறை அணி, சொற்பொருள்பின்வருநிலை அணி, தற்குறிப்பேற்ற அணி ஆகிய அணிகளை பயிற்சி செய்வதன் மூலம் முழு மதிப்பெண் பெறலாம்.

| | |
|---|---|
| 9. அலகிட்டு வாய்பாடு பகுதி வினாவிற்கு, பாடலின் சீரைப் பிரித்து அசை பார்த்து, அசைக்கேற்ற வாய்பாடு எழுத வேண்டும். | **எ.கா:** எய்துவர் <u>**படி–1 :**</u> **சீர்பிரித்தல் :** - எய் / துவர்<br><u>**படி–2 :**</u> **அசையை எழுதுதல் :** நேர் நிரை<br><u>**படி–3 :**</u> **வாய்பாடு காணுதல் :** கூவிளம் |
| அலகிட்டு வாய்பாடு இடும் முறையை நன்கு பயிற்சி செய்திருந்தால் இவ்வினாவிற்கு எளிதில் முழு மதிப்பெண் பெறலாம். | |

**பகுதி – IV (5 மதிப்பெண் வினா)**

10. 38ஆவது செய்யுள் வினாவிற்கு முதல் 4 அல்லது 5 செய்யுள் புத்தக சிறு மற்றும் நெடுவினாக்களை நன்கு படித்தால், இப்பகுதியில் கேட்கப்படும் ஒரு செய்யுள் வினாவிற்கு கண்டிப்பாக விடையளிக்க இயலும்.
11. கடிதம் பகுதியில் தனிநபர் அல்லது அலுவலகக் கடிதம் எழுதுவதற்கு கீழ்க்கண்ட அட்டவணையின் அடிப்படையிலும் வினாவில் கொடுக்கப்பட்ட தகவலை சரியாக பொருத்தி எழுதினாலே முழு மதிப்பெண் பெற வாய்ப்புள்ளது.

| **தனிநபர் கடிதம்** | | **அலுவலகக் கடிதம்** | |
|---|---|---|---|
| 1. இடம், நாள் | ½ | 1. அனுப்புநர், பெறுநர் | 1 |
| 2. வணக்கம் | ½ | 2. மதிப்பிற்குரிய ஐயா, பொருள் | 1 |
| 3. கடிதத்தின் மையக் கருத்து | 2 | 3. கடிதத்தின் மையக் கருத்து | 1½ |
| 4. இப்படிக்கு, கையெழுத்து | 1 | 4. இப்படிக்கு, கையெழுத்து, இடம், நாள் | 1 |
| 5. உறைமேல் முகவரி | 1 | 5. உறைமேல் முகவரி | ½ |

12. 40ஆவது படம் உணர்த்தும் கருத்து சார்ந்த ஐந்து தொடர்கள், பத்தி அல்லது கவிதை எழுதுதல் வினாவிற்கு, மாணவர்கள் சொந்த சிந்தனையில் கவிதை வடிவில் 5 தொடர்கள் எழுதினாலே 3-லிருந்து 4 மதிப்பெண்கள் வரை பெறலாம்.
13. 41ஆவது விண்ணப்பம் - புத்தகத்தில் கொடுக்கப்பட்ட நூலக உறுப்பினர் படிவம், மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பம் மற்றும் பணி வாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியல் நிரப்புதல் ஆகிய 4 விண்ணப்பங்களையும் நன்கு பயிற்சி செய்து கொள்ளவும். இதில் கட்டாயம் முழு மதிப்பெண் பெறலாம்.
14. Translation பகுதியில் 9 பாடங்களில் உள்ள 9 Translation-களையும் பயிற்சி செய்வதன் மூலம் 1 வினாவிற்கு விடை எழுத இயலும்.

**பகுதி – V (8 மதிப்பெண் வினா)**

15. 45ஆவது கட்டுரை வினாவிற்கு உட்தலைப்புகள் குறிப்புகளாக கொடுக்கப்பட்டிருக்கும், அதை குறிப்புச்சட்டகமாக மாற்றி உங்கள் சிந்தனைகளை சேர்த்து 2-3 பக்கத்திற்கு கட்டுரையாக எழுதவும்.